# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 31/2025**

Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமகிருஷ்ணன் | Calling | : |
| Father/Husband's Name | : குப்புசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 12th பிப்ரவரி 2026.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஈரோடு சாஸ்திரி நகரில் வசித்து கொண்டு வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் ஸ்ரீ ஜெயசக்தி டிரேடர்ஸ் HP பெட்ரோல் பங்கில் பம்ப் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது பெயின்டராக பணிபுரிந்து வருகிறேன். 01.02.2023 ம் தேதி இரவு 9.15 மணி இருக்கும் நான் பணியில் இருந்தபோது கருப்பு கலர் பல்சர் பைக்கில் நீல கலர் சட்டை அணிந்து ஒருவர் பைக்கை ஓட்டி வந்தார். பின்னார் சந்தனகலர் சட்டை போட்டு கொண்டு வந்தார். மேற்படி கருப்பு கலர் பைக்கை ஓட்டிக்கொண்டு வந்தவர் பெட்ரோல் பங்க் கேசியர் டேபிளுக்கு அருகே வந்து டேபிளை தட்டி டேபிளை எட்டி பைக்கில் இருந்தவாறே டேபிளை உதைத்தார்.

2. அப்போது பல்சர் பைக்கில் பின்னால உட்கார்ந்து இருந்த நபர் கத்தியை கேசியர் மனோகரனிடம் காட்டி பணத்தை கொடுக்கிறாயா இல்லை வெட்டடுமா என்ற கத்தியை காட்டி மிரட்டினார். பைக்கில் வந்த இரண்டு பேரும் கேசியர் மனோகரிடம் இருந்த பேக்கில் இருந்த ரூ.48,200/-ஐ பறித்து கொண்டு பைக்கில் சென்றுவிட்டார்கள். அதன்பிறகு ஓனர் சித்ரா, செந்தில்குமாருக்கு போன் செய்து பைக்கில் இரண்டு பேர் வந்து பணத்தை பறித்து கொண்டு சென்றுவிட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னோம். 22.03.2023ம் அன்று மொடக்குறிச்சி

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:53:17 +0530

காவல்நிலையத்தில் இருந்து ஒரு நபரை பிடித்துள்ளதாகவும், அந்த நபர் பெயர் குமரேசன் என்றும் கருங்கல்பாளையம் என்றும் எனவே என்னையும், கேசியர் மனோகரனையும் விசாரணைக்கு வருமாறு போலீஸார் அழைத்தார்கள். நானும், மனோகரனும் காவல்நிலையத்திற்கு போனோம். நாங்கள் போய் அடையாயம் காட்டினோம்.

3. 25.05.2023 ம் தேதி பைக்கில் பின்னால் உட்கார்ந்தவரின் பெயர் இசக்கிபாண்டி அவர் பேக்கை பிடிங்கி சென்றவர் அவரை அடையாளம் காட்டும்படி போலீஸார் சொன்னார்கள். நானும், மனோகரனும் காவல்நிலையத்திற்கு போனோம். நாங்கள் போய் அடையாயம் காட்டினோம்.இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதபடிக்க நன்கு தெரியும். எனக்கு இன்று சாட்சியம் அளிக்க வந்தபோது வழக்கு சம்பந்தமாக எப்படி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று போலீஸார் சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் மேற்படி பெட்ரோல் பங்கில் 1 வருடமாகத்தான் பணிபுரிந்து வந்தேன். நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்யும் பொழுது மொடக்குறிச்சி காவல்நிலைய காவல் அதிகாரிகள் பெட்ரோல் அடித்து செல்வது வழக்கமாக ஒன்று தான் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் எனக்கும், எனது ஓனருக்கும் மொடக்குறிச்சி காவல்நிலைய காவல் அதிகாரிகள் நன்கு பழக்கம் என்றால் சரிதான்.

2. எங்கள் ஓனர் வீடு பெட்ரோல் பங்கில் இருந்து சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கிலோமீட்டர் இருக்கும். நான் ஓனர் வீட்டிற்கு சென்றுள்ளேன். ஓனர் வீட்டில் இருந்து பெட்ரோல் பங்கிற்கு வருவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 20 நிமிடம் ஆகும். சம்பவம் நடந்த அன்று இரவு 9.00 மணிக்கு மேல் எத்தனை வாகனங்கள் பெட்ரோல் போட வந்திருப்பார்கள் என்றால் இரயில்வே டிராக் மூடியிருந்ததால் இரண்டு பக்கம் இருந்தும் வாகனங்கள் எதுவும் வரவில்லை. இரயில்வே டிராக் மூடியிருப்பது எங்கள் பங்கில் இருந்து பார்த்தாலே தெரியும் என்றால் சரிதான்.

3. எதிரி இருவரும் என்ன வண்டியில் வந்தார்கள் என்று குறிப்பிட்டு போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு எழுதபடிக்க தெரிந்திருந்தும் அந்த பல்சர் பைக்கின் வண்டி எண்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:53:24 +0530

குறித்து ஏன் குறிப்பிடவில்லை என்றால் வண்டி நெம்பர் அந்த பைக்கில் இல்லை, வண்டியில் முகப்பு விளக்கும் அந்த வண்டியில் இல்லை. மேற்படி விபத்தை எனது முதல் விசாரணையிலும், போலீஸார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பல்சர் பைக்கில் வந்தவர்கள் பெட்ரோல் பங்கில் எந்த திசையாக வந்தார்கள் என்றால் இரயில்வே டிராக்கில் இருந்து வந்து தெற்கு பார்த்தமாதிரி கேசியர் டேபில் அருகே பைக்கை நிறுத்தி டேபிளை எட்டி உதைத்துவிட்டு பணத்தை பிடிங்கிகொண்டு போனார்கள். ரோட்டை பார்த்து தெற்கு பார்த்தாற்போல் அமைந்துள்ளது என்றால் ஆமாம். அதில் எத்தனை பெட்ரோல் பம்ப் உள்ளது என்றால் 4 பெட்ரோல் பம்ப் உள்ளது. எந்த பெட்ரோல் பம்ப் அருகே பைக்கை நிறுத்தினார்கள் என்றால் அலுவலகத்தை ஒட்டி கேஸ் பாக்ஸ் அருகே உள்ள 2ம் நெம்பர் பெட்ரோல் பம்ப் அருகே நின்றார்கள்.

4. பெட்ரோல் பங்கில் மழை, வெயில் வராதவாறு செட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூரையில் மின்விளக்குள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பங்கில் கேமரா உள்ளதா என்றால் உள்ளது. எத்தனை கேமரா உள்ளது என்றால் பெட்ரோல் பங்கில் 4 தூண்களிலும், ஏர் பிடிக்கும் இடத்தில் 1ம், ஆபீஸ் ரூமில் 1ம், லைட் கம்பத்தில் 1ம், வண்டி வருவதும், போவதும் தெரிகிற மாதிரி 2 கேமராக்கள் மாட்டப்பட்டுள்ளது. பைக்கை ஓட்டி வந்த நீல கலர் சட்டை போட்டவர் தான் கத்தியை காட்டி மிரட்டினாரா என்றால் இல்லை, பின்னால் உட்கார்ந்து சந்தன கலர் சட்டை போட்டவர் தான் கத்தியை காட்டி மிரட்டி டேபிளை தள்ளிவிட்டு உதைத்து விட்டு பணத்தை பிடிங்கி சென்றவர்.

5. பெட்ரோல் பங்கிற்கு அருகில் கடைகள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கடையில் இரவு 9.00 மணி வரை கடை இருக்கும் என்றால் இல்லை, ஞாயிற்று கிழமை என்பதால் 3 கடைகளும் மதியம் வரை தான் இருந்தது. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் இரவு 9.00 மணி முதல் 9.15 மணி வரை நடந்தது. சம்பவத்திற்கு பின்னிட்டு காவல்நிலையத்திற்கு போன் செய்து சொன்னேனா என்றால் இல்லை, ஓனருக்கு தான் தகவல் சொன்னேன். மேற்படி சம்பவம் எதுவும் நடக்காததால் தான் 100க்கு போன் செய்யவில்லை என்றால் சரியல்ல, எது நடந்தாலும் ஓனர் தகவல் சொல்ல சொன்னதால் ஓனருக்கு தான் முதலில் சொன்னேன். ஓனருக்கு 9.20க்கு தகவல் சொல்லியிருப்பேன்.

6. ஓனர் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் போன் செய்து தகவல் சொன்னவுடன் சுமார் 20 நிமிடத்தில் ஓனர் வந்துவிட்டார்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:53:30 +0530

ஓனருக்கு என்னிடம் இருந்த போன் மூலமாகத்தான் நான் தான் தகவல் சொன்னேன். போனிலேயே எவ்வளவு தொகை காணாமல் போனது என்ற விபரத்தை சொல்லிவிட்டேனா என்றால் இல்லை, ஓனர் வந்தபிறகு தான் பேக்கில் எவ்வளவுபணம் உள்ளது என்றும், பெட்ரோல் டீசல் எத்தனை வண்டிகளுக்கு அடித்துள்ளது என்று கணக்கு போட்டு தெரிந்தது. அரைமணி நேரத்தில் கணக்கு போட்டு எவ்வளவு என்று தெரிந்து கொண்டோமா என்றால் இரவு 8.00 மணிக்கு பெட்ரோல் போட்ட தொகையை கொடுத்துவிடுவோம், பிறகு இரயில்வே டிராக் திறந்தவுடன் வாகனங்கள் பெட்ரோல் அடிக்கும் அந்த தொகையும்எப்போதும் அட்வான்ஸாக இருப்பில் ஒரு குறிப்பிட்ட தொகை இருக்கும், அது எல்லாம் சேர்ந்து தான் அன்று மேற்படி தொகை இருந்தது.

7. கணக்கு வழக்கு இரவு 10.00க்குள் பார்த்தோமா என்றால் 10.00 மணிக்கு மேலே ஆகியிருக்கும். மேலும், ஓனர் வந்தபிறகு கணக்கு பார்க்கவில்லை, மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் வந்தபிறகு தான் கணக்கு பார்த்தோம். மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் இருந்து சுமார் 6,7போலீஸார் வந்திருப்பார்கள். மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் இருந்து சுமார் 9.50க்கு வந்திருப்பார்கள். மொடக்குறிச்சி காவல் நிலையத்திற்கும் பெட்ரோல் பங்கிற்கும் சுமார் 20 கிலோமீட்டர் தொலைவு இருக்கும்.ஓனர் பங்கிற்கு வந்து காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு வேறு யாருக்கு தகவல் சொன்னார் என்றால் உறவினருக்கு தகவல் சொன்னார்.

8. புகார் அடுத்த நாள் காலையில் தான் கொடுக்கப்பட்டது. போலீஸார் சம்பவம் நடந்தவுடன் வந்து விபரங்களை கேட்டு எழுதி வாங்கிக்கொண்டார்கள். புகார் கொடுக்கும்போது நானும் உடன் சென்றேனா என்றால் நான், கேசியர் மனோகரன், ஓனர், மேலாளர் ஆகியோர்கள் புகார் கொடுக்க சென்றோம். புகாரை கேசியர் மனோகர் தான் எழுதினார். புகாரில் என்னிடமும், ஓனரும், சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. எதில் கையொப்பம் போட்டேன் எனக்கு தெரியாது. அன்றைய தினமே காவல்நிலையத்தில் வைத்து என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் முந்தைய நாள் சம்பவம் பற்றி விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

9. பின்னிட்டு போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. புகார் கொடுக்கும்போதே கேமரா பதிவுகளை இணைத்து கொடுத்தோமா என்றால் ஆய்வாளர் நேரடியாக CCTV கேமரா பதிவுகளை

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:53:51 +0530

பார்த்துவிட்டார், பதிவிறக்கம் செய்தது பற்றி ஓனருக்கு தான் தெரியும். புகார் கொடுக்கும்போது கொடுத்தார்களா என்பது பற்றி ஞாபகம் இல்லை. 22.02.2023 அன்று சுமார் எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்று எதிரியை அடையாளம் காட்டினேன் என்றால் மதியம் 2.00 முதல் 3.00 இருக்கும். முதலில் மனோகர் சென்றுவிட்டார், பின்னிட்டு நான் சென்றேன். நானும், கேசியர் மனோகரன் மட்டும் தனித்தனியாக காவல்நிலையம் சென்று அடையாளம் காட்டினோம்.

10. இசக்கி பாண்டியை கைது செய்த பிறகு அவரை எத்தனை மணிக்கு சென்று அடையாளம் காட்டினேன் என்றால் பகல் 11.30 முதல் 12.00 மணிக்குள் சென்றேன். காவல்நிலையத்தில் எதிரிகளை அடையாளம் காட்டியபோது யார் முகக்கண்ணாடி போட்டிருந்தார்கள் என்றால் இருவருமே முகக்கண்ணாடி போடவில்லை. போலீஸாருக்கும், பெட்ரோல் பங்க் உரிமையாளருக்கும் நல்ல பழக்க வழக்கம் உள்ள நிலையில் போலீஸார் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, சம்பவத்தின் போது நான் அருகில் இருந்தேன். ஜோல்னா பையில் இருந்து கத்தியை எடுத்து கழுத்தில் வைக்கும்போது பார்த்தேன். பின்னிட்டு எதிரி கொக்கியை வடிவலான அரிவாள் என்று தற்போது குறிப்பிடுகிறார். நீள, அகலம் சரியாக பார்க்கவில்லை.

11. போலீஸாரின் அனுசரனை எனக்கு வேண்டும் என்பதால் அவர்கள் புள்ளிவிபரக்கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**1ம் எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.02.12 18:53:57 +0530